**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>Prob.OP.No.356/2022</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் திங்கட்கிழமை மனுதாரர் தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. அமுதா, மொழிபெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லூர்துராஜ் | தந்தை பெயர் | : | பாக்கியம் ஆசாரி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 24.11.2025

**P.W. : 1**

**<u>மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் மனுதாரர் ஆவேன். எனது முதல்விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் மேரி ஜோஸ்பின் இறப்புச் சான்றிதழ் **ம.சா.ஆ.1** ஆகும். எனது சின்னம்மா புஷ்பம் என்பவரின் இறப்புச் சான்றிதழ் **ம.சா.ஆ.2** ஆகும். 18.04.1971 தேதியில் பாக பிரிவினை ஆவண எண்.1616/1971 பதிவு சான்றிதழ் **ம.சா.ஆ.3**

ஆகும். மனுச் சொத்தை பொறுத்த SLR பதிவேடு கணினி பதிவிறக்கம் செய்த நகல் **ம.சா.ஆ.4** ஆகும். என் தந்தை பாக்கியம் ஆசாரியின் இறப்புச் சான்றிதழ் **ம.சா.ஆ.5** ஆகும். 24.01.2018 தேதியில் பாக்கியம் எழுதி வைத்த பதிவு செய்யாத உயில் பத்திரம் அசல் **ம.சா.ஆ.6** ஆகும் (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). என் தந்தையின் வாரிசு சான்றிதழ் **ம.சா.ஆ.7** ஆகும். மனுச்சொத்தை பொறுத்த 01.01.1941 முதல் 31.12.1974 வரையான காலத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் **ம.சா.ஆ.8** ஆகும். மனுச் சொத்தை பொறுத்த வழிகாட்டி மதிப்பு பதிவுத் துறை வலைதளத்திலிருந்து எடுக்கப்பட்ட சான்று **ம.சா.ஆ.9** ஆகும். எனது ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.10** ஆகும். **(வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.